**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | | | |
|---|---|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. | | |
| Calendar | ... | | |
| Miscellaneous | ... | | |
| Preliminary Register | ... | | |
| Sessions | ... | **SC 252/2013** | **L.W.1** |
| Deposition of witness for | ..... | Prosecution | **P.W.1** |
| | ..... | Defence | |
| | .... | Court | |
| Name | : | திரு.வேலு த/பெ.செல்லன் | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 07.11.2023.

**முதல் விசாரணை:-**

நான் ஜமீன்எண்டத்தூர் கிராமம், மதுராந்தகத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்த மாரி என்பவர் எனது மாமனார். ஆஜர் எதிரிகள் தெரியும், அவர்கள் எங்கள் ஊர்க்காரர்கள். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலையில் நான் கழனியில் இருந்து வீட்டிற்கு போனபோது சண்டைபோட்டு என் மாமனார் மாரியின் மண்டையில் அடிப்பட்டு மதுராந்தகம் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள், அங்கிருந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். அதன் பிறகு என் மாமனாரை மேல்சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு என் மாமனார் 2 அல்லது 3 நாட்கள் இறந்து விட்டார். தேதி ஞாபகமில்லை. நான் சித்தாமூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள

கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. 2 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்பொழுது 29.04.2012ம் தேதி சுமார் 9.00 மணிக்கு அஜீத் பேனர் கட்அவுட்டை என் மாமனார் மாரி என்பவர் வீட்டின் முன்பு வைப்பதற்கு அதே ஊரை சேர்ந்த சேகர் மகன் விக்ரம், வேதகிரி மகன் சிலம்பரசன் ஆகிய இருவரும் அங்கு வந்திருந்தார்கள் என்றும், அப்பொழுது என் மாமனார் இங்கு என் வீட்டு வாசல் எதிரில் பேனரை கட்டக்கூடாது என்று கூறினார் என்றும், அதற்கு சேகர் மகன் விக்ரம் என்பவன் என் மாமனாரை பார்த்து, அசிங்கமான வார்த்தைகளை கூறி தடியால் தலையின் பின்பக்கம் அடித்து ஒழிந்து போடா என்றும், வேதகிரி மகன் சிலம்பரசன் என்பவன் தடியால் என் மாமனாரை கழுத்தில் அடித்தார் என்றும், என் மாமனார் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், உடனே என் மாமனாரை மதுராந்தகம் மருத்துவமனைக்கு நானும் என் மச்சான் வேணு என்பவரும் சிகிச்சைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும், அங்கு சிகிச்சை அளித்தும், அங்கிருந்து சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு சிகிச்சைக்கு சேர்த்து உடனிருந்து 30.04.2012ம் தேதி இரவு 9.30 மணிக்கு சித்தாமூர் காவல் நிலையம் வந்து புகார் அளித்தேன் என்றும், மேலும் சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த எனது மாமனாருக்கு தலையில் ரத்தக்கசிவு ஏற்பட்டு, ரத்தம் உறைந்துபோய் அதற்கு மருத்துவர்கள் அவருக்கு ஆப்ரேஷன் செய்தார்கள் என்றும், சிகிச்சை பலன் அளிக்காமல் என் மாமனார் 05.05.2012ம் தேதி காலை

8.00 மணிகு இறந்துவிட்டார் என்றும், மீண்டும் இதுகுறித்து சித்தாமூர் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | | | |
|---|---|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. | | |
| Calendar | ... | | |
| Miscellaneous | ... | | |
| Preliminary Register | ... | | |
| Sessions | ... | **SC 252/2013** | **L.W.2** |
| Deposition of witness for | ..... | Prosecution | **P.W.2** |
| | ..... | Defence | |
| | .... | Court | |
| Name | : | திரு.வேணு த/பெ.மாரி | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 07.11.2023.

**முதல் விசாரணை:-**

நான் ஜமீன்எண்டத்தூர் கிராமம், மதுராந்தகத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 எனது அக்காவின் கணவர். இறந்துபோன மாரி என் அப்பா. ஆஜர் எதிரிகள் தெரியும், அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். நான் பண்ணையில் வேலை செய்து வந்தேன். வாரத்திற்கு ஒரு முறைதான் வீட்டிற்கு வருவேன். என் அப்பா மாரி எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் அப்பா சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். என் அப்பா சென்னை அரசு மருத்துவமனையில் எத்தனை நாள் சிகிச்சையில் இருந்தார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. புகார் யார், எதற்காக கொடுத்தார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்பொழுது 29.04.2012ம் தேதி சுமார் 9.00 மணிக்கு அஜீத் பேனர் கட்அவுட்டை என் அப்பர் மாரி என்பவர் வீட்டின் முன்பு வைப்பதற்கு அதே ஊரை சேர்ந்த சேகர் மகன் விக்ரம், வேதகிரி மகன் சிலம்பரசன் ஆகிய இருவரும் அங்கு வந்திருந்தார்கள் என்றும், அப்பொழுது என் அப்பா இங்கு என் வீட்டு வாசல் எதிரில் பேனரை கட்டக்கூடாது என்று கூறினார் என்றும், அதற்கு சேகர் மகன் விக்ரம் என்பவன் என் மாமனாரை பார்த்து, அசிங்கமான வார்த்தைகளை கூறி தடியால் தலையின் பின்பக்கம் அடித்து ஒழிந்து போடா என்றும், வேதகிரி மகன் சிலம்பரசன் என்பவன் தடியால் என் அப்பாவை கழுத்தில் அடித்தார் என்றும், என் அப்பா மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், உடனே என் அப்பாவை மதுராந்தகம் மருத்துவமனைக்கு நானும் என் மாமா வேலு என்பவரும் சிகிச்சைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றும், அங்கு சிகிச்சை அளித்தும், அங்கிருந்து சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு சிகிச்சைக்கு சேர்த்து உடனிருந்து 30.04.2012ம் தேதி இரவு 9.30 மணிக்கு என் மாமா சித்தாமூர் காவல் நிலையம் வந்து புகார் அளித்தார் என்றும், மேலும் சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த எனது அப்பாவிற்க்கு தலையில் ரத்தக்கசிவு ஏற்பட்டு, ரத்தம் உறைந்துபோய் அதற்கு மருத்துவர்கள் அவருக்கு ஆப்ரேஷன் செய்தார்கள் என்றும், சிகிச்சை பலன் அளிக்காமல் என் அப்பா 05.05.2012ம் தேதி காலை 8.00 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், மீண்டும் இதுகுறித்து சித்தாமூர் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | | | |
|---|---|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. | | |
| Calendar | ... | | |
| Miscellaneous | ... | | |
| Preliminary Register | ... | | |
| Sessions | ... | **SC 252/2013** | **L.W.9** |
| Deposition of witness for | ..... | Prosecution | **P.W.3** |
| | ..... | Defence | |
| | .... | Court | |
| Name | : | திரு.ராம்குமார் த/பெ.காந்தி | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 09.11.2023.

**முதல் விசாரணை:-**

நான் ஜமீன்எண்டத்தூர் கிராமம், மதுராந்தகத்தில் குடியிருக்கிறேன். நான் கார் டிரைவராக வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்தபோன மாரி என்பவர் என்னுடைய தாத்தா. சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டிற்கு வந்தபோது என் தாத்தா ரோட்டில் அடிப்பட்டு கிடந்ததாக வீட்டில் சொன்னார்கள். நான்போய் பார்த்தபோது என் தாத்தாவிற்கு தலையில் அடிப்பட்டு, பேச்சுமூச்சு இல்லாமல் இருந்தார், உடனே நான் என் தாத்தாவை மதுராந்தகம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் தாத்தாவை யாரோ அடித்து விட்டார்கள் என்று மதுராந்தகம் மருத்துவமனையில் சொன்னேன். மதுராந்தகம் மருத்துவமனையில் முடியாது என்று சொல்லிவிட்டு, செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்செல்ல சொன்னார்கள். பிறகு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் பார்த்து விட்டு அன்றைக்கு இரவே மேல்சிகிச்சைக்காக சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சொன்னார்கள்.

சென்னை அரசு பொது மருத்துவமனையில் என் தாத்தாவை சிகிச்சைக்காக சேர்த்தோம். அதன் பிறகு 4 நாட்கள் கழித்து என் தாத்தா இறந்து விட்டதாக தகவல் வந்தது. என் தாத்தாவை யாரோ சண்டை போட்டு அடித்து விட்டதாக சொன்னார்கள். சித்தாமூர் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU.

Calendar ...
Miscellaneous ...
Preliminary Register ...
Sessions ... **SC 252/2013** **L.W.10**

Deposition of witness for ..... Prosecution **P.W.4**
..... Defence
.... Court

Name : திரு.கார்த்திக் த/பெ.ஏழுமலை

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 09.11.2023.

**முதல் விசாரணை:-**

நான் ஜமீன்எண்டத்தூர் கிராமம், மதுராந்தகத்தில் குடியிருக்கிறேன். நான் பார்மசியில் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன மாரி என்பவர் தெரியும், அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். 12 வருடங்களுக்கு முன்பு மாரி என்பவர் இறந்துவிட்டார். நான் லைசென்ஸ் ரெனுவல் சம்பந்தமாக சித்தாமூர் காவல் நிலையத்திற்கு சென்றபோது வெள்ளை தாளில் இரண்டு கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று போலீசார் என்னிடம் சொல்லவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான், என்னுடன் வாசுதேவன் என்பவரும் கையெழுத்து போட்டார். பார்வை மசகரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்பொழுது 29.4.2012ம் தேதி இரவு 9.00 மணிக்கு ஜமீன்எண்டத்தூர் கிராமத்திலுள்ள மாரி என்பவரது வீட்டினருகே சண்டை வழக்கு சம்பந்தமாக 1.5.2012ம் தேதி காலை சுமார் 6.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அப்பொழுது நானும் எங்கள் ஊரை சேர்ந்த வாசுதேவன் என்பவரும் உடனிருந்தோம் என்றும், சம்பவ இடத்தை பார்வையிட்டு எழுதி கொண்ட மகசரில் நாங்கள் இருவரும் கையொப்பம் போட்டோம் என்றும், இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | | | |
|---|---|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. | | |
| Calendar | ... | | |
| Miscellaneous | ... | | |
| Preliminary Register | ... | | |
| Sessions | ... | **SC 252/2013** | **L.W.11** |
| Deposition of witness for | ..... | Prosecution | **P.W.5** |
| | ..... | Defence | |
| | .... | Court | |
| Name | : | திரு.வாசுதேவன் த/பெ.ராகவன் | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 09.11.2023.

**முதல் விசாரணை:-**

நான் ஜமீன்எண்டத்தூர் கிராமம், மதுராந்தகத்தில் குடியிருக்கிறேன். நான் ஜனா ஸ்மால் வங்கியில் வேலை பார்க்கிறேன். 10 வருடங்களுக்கு முன்பு ஸ்ரீராம் பைனான்சில் வேலை பார்த்து வந்தேன். இந்த வழக்கில் இறந்துபோன மாரி என்பவர் தெரியும், அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். 12 வருடங்களுக்கு முன்பு மாரி என்பவர் இறந்துவிட்டார். அவர் எப்படி இறந்து போனார் என்று எனக்கு தெரியாது. கடந்த 10 வருடங்களுக்கு முன்பு எனது லைசென்ஸ் ரெனுவல் சம்பந்தமாக சித்தாமூர் காவல் நிலையத்திற்கு சென்றபோது எழுதாத வெள்ளை தாளில் இரண்டு கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று போலீசார் என்னிடம் சொல்லவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான், என்னுடன் கார்த்திக் என்பவரும் கையெழுத்து போட்டார். பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது.

பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்பொழுது 29.4.2012ம் தேதி இரவு 9.00 மணிக்கு ஜமீன்எண்டத்தூர் கிராமத்திலுள்ள மாரி என்பவரது வீட்டினருகே சண்டை வழக்கு சம்பந்தமாக 1.5.2012ம் தேதி காலை சுமார் 6.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், அப்பொழுது நானும் எங்கள் ஊரை சேர்ந்த கார்த்திக் என்பவரும் உடனிருந்தோம் என்றும், சம்பவ இடத்தை பார்வையிட்டு எழுதி கொண்ட மகசரில் நாங்கள் இருவரும் கையொப்பம் போட்டோம் என்றும், இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | | | |
|---|---|---|---|
| IN THE COURT OF : | THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, CHENGALPATTU. | | |
| Calendar | ... | | |
| Miscellaneous | ... | | |
| Preliminary Register | ... | | |
| Sessions | ... | **SC 252/2013** | **L.W.12** |
| Deposition of witness for | ..... | Prosecution | **P.W.6** |
| | ..... | Defence | |
| | .... | Court | |
| Name | : | திரு.ஜோதிராமலிங்கம் த/பெ.பெருமாள் | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 16.11.2023.

**முதல் விசாரணை:-**

நான் முதுக்கரை கிராமம், மதுராந்தகத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். நான் 10 வருடங்களுக்கு முன்பு சிறுநல்லூர் ஊராட்சியில் ஊராட்சிமன்ற துணை தலைவராக இருந்து வந்தேன். இந்த வழக்கில் இறந்துபோன மாரி என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியாது. நான் துணை தலைவராக இருந்த காலத்தில் அடிக்கடி சித்தாமூர் காவல் நிலையத்திற்கு சென்று வருவது வழக்கம். அவ்வாறு 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது போலீசார் என்னிடம் கையெழுத்து போடுமாறு சொன்னார்கள். நான் 3 கையெழுத்து போட்டேன். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் முதல் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது.

தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான், அந்த கையெழுத்து அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்பொழுது 6.5.2012ம் தேதி நான் ஊராட்சிமன்ற துணை தலைவராக பணிசெய்து வந்தேன் என்றும், அன்று மாலை சுமார் 15.00 மணிக்கு முதுகரை கூட்ரோடு என்ற இடத்தில் ஒரு நபரை அழைத்து விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும், அப்பொழுது அங்கு நானும், என்னுடன் பாஸ்கர் என்பவரும் உடனிருந்தார் என்றும், அந்த நபரை விசாரிக்க அவர் பெயர் விக்ரம், வயது 22, தந்தை பெயர் சேகர் என்கிற குணசேகரன், ஜமீன்எண்டத்தூர் காலனி, மதுராந்தகம் என்றும், அவர் ஜமீன்எண்டத்தூரில் நடந்த சண்டை வழக்கில் சம்பந்தப்பட்டு தலைமறைவாக இருந்ததாகவும், அவர் தற்போது சந்தோஷி கல்லூரியில் பாலிடெக்னிக் 3ம் ஆண்டு படித்து வருவதாகவும், அஜீத் ரசிகர் என்றும், அஜீத் ரசிகர்மன்ற பேனர் வைக்கும்போது அதே ஊரை சேர்ந்த மாரி என்பவருடன் வாய்தகராறு செய்து சண்டை வந்தது என்றும், மாரி என்பவருக்கு காயம் ஏற்பட்டு சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர், 5.5.2012ம் தேதி காலை இறந்துவிட்டார் என்றும், அதனால் தன்னை கொலை வழக்கில் போலீசார் பிடித்துவிடுவார்கள் என்று பயந்து மதுராந்தகம் சின்னகாலனியில் தனது அத்தை வீட்டில் இருந்து ஜமீன்எண்டத்தூருக்கு வந்து இரவு துணிகளை எடுத்துக்கொண்டு கேளம்பாக்கம் சென்றுவிடலாம் என்று வந்தபோது போலீசாரிடம் மாட்டிக்கொண்டேன் என்றும், என்னை அழைத்து சென்றால் சண்டை வழக்கில் பயன்படுத்திய தடிகளை மறைத்து வைத்துள்ளேன் என்றும், தன்னை அழைத்து சென்றால் அந்த தடிகளை அடையாளம் காட்டி

எடுத்து தருகிறேன் என்று ஒப்புக்கொண்டார் என்றும், எதிரி போலீசாரிடம் வழக்கு சொத்தினை வேளிக்காத்தான் முள்புதரில் இருந்து எடுத்து கொடுத்தார் என்றும், அதனை போலீசார் 17.00 மணி முதல் 17.30 மணி வரை மகசர் தயார் செய்து கைப்பற்றினாார் என்றும், அதில் நானும் என்னுடன் இருந்த பாஸ்கர் என்பவரும் கையெழுத்திட்டோம் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**<u>மறு விசாரணை</u>**

இல்லை